மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சாத்தூர்.

முன்னிலை :– திருமதி.P.அனுராதா, B.A., B.L.,
மாவட்ட உரிமையியல் நீதிபதி மற்றும்
நீதித்துறை நடுவர் எண்.1, சாத்தூர்.

2024 ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 13 ம் நாள் செவ்வாய்க்கிழமை

இ.மஎண்.08/2024
உள்
அசல் வழக்கு எண்.26/2020
––––––––

R.S. ராகுல்
(வாதியின் பவர் ஏஜெண்ட்
ரேணுகா மூலம் ... மனுதாரர்/வாதி

/எதிர்/

1. தனலட்சுமி
2. வட்டாட்சியர் அவர்கள்,
சாத்தூர்.
3. சார்பதிவாளர் அவர்கள்,
சாத்தூர். எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள்

4. பிரதாப் சந்திரகுமார் .. உத்தேச எதிர்மனுதாரர்/உத்தேச பிரதிவாதி

இந்த மனு 11.03.2024 ம் தேதி இந்நீதிமன்ற கோப்பிற்கு எடுக்கப்பட்டு என் முன்பு 05.08.2024–ம் தேதி இறுதி விசாரணைக்கு வந்தபோது மனுதாரர்/வாதி தரப்பில் வழக்கறிஞர் திரு. G.R. முருகன், அவர்கள் ஆஜராகியும், 1 ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதி தரப்பில் வழக்கறிஞர் திரு.வெ. விநாயகமூர்த்தி அவர்கள் ஆஜராகியும், எதிருரை தாக்கல் செய்யாததாலும், 2, 3 எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பில் அரசு வழக்கறிஞர் அவர்கள் ஆஜராகியும், மனுதாரர் தரப்பு மனுவுரை மற்றும் எதிர்மனுதாரர்கள் தரப்பு எதிருரையை நன்கு கேட்டறிந்தும், சாட்சிய சான்றாவணங்களை நன்கு பரிசீலனை செய்தும் இன்று இந்நீதிமன்றம் வழங்கும் . . .

**உத்தரவு**

இம்மனுவானது உரிமையியல் நடைமுறைச்சட்டம் கட்டளை 1 விதி 10 (2) மற்றும் பிரிவு 151ன் கீழ் இம்மனுவினை ஏற்று அபிடவிட்டில் கண்டுள்ள காரணங்களினால், உத்தேச எதிர்மனுதாரர்/உத்தேச பிரதிவாதியை தாவா வழக்கில்

சேர்க்க அனுமதி வழங்கி உத்தரவிடக்கோரி 11.03.2024ம் தேதி மனுதாரரால் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) <u>மனுதாரர்/வாதி தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள அபிடவிட்டு சுருக்கம்:–</u>

**2.1.** மனுவில் மனுதாரர். ஷை வழக்கில் வாதியின் பவர் ஏஜெண்ட் ஆவார். அசல் வழக்கானது தபசில் சொத்து வாதிக்கு பாத்தியப்பட்டது என்று விளம்புகை செய்தும், அதன் தொடர்ச்சியாக வாதி தபசில் சொத்தை அமைதியான முறையில் அனுபவம் செய்து வருவதை 1, 2 பிரதிவாதிகளோ, அவர்களது வகையாட்களோ, எந்த வகையிலும் இடைஞ்சல் செய்யக்கூடாது என்று நிரந்தர தடையுறுத்துக் கட்டளை பரிகாரம் கோரியும், அதேபோல் 1ம் பிரதிவாதிக்கு வாதியின் தாத்தா ராஜகோபால் 03.02.1996ம் தேதிய சீர்திருத்தம் செய்து கொடுத்ததாக சொல்லப்படும் சீர்திருத்த பத்திரம் செல்லாது என்று விளம்புகை செய்தும், மேற்படி 03.02.1996ம் தேதிய சீர்திருத்த பத்திரம் குறித்து 3ம் பிரதிவாதி அலுவலகத்தில் ஏற்படுத்திய பத்திர பதிவை நீக்கம் செய்திட 3ம் பிரதிவாதிக்கு எதிராக செயலுறுத்துக் கட்டளை பரிகாரம் கோரியும் தாவா வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

**2.2.** ஷை வழக்கானது மனுதாரரது தரப்பில் 30.11.1983ம் தேதி வாதியின் தாத்தா ராஜகோபால் கிரையம் பெற்ற கிரைய ஆவண எண்.2339/1983, வாதியின் தாத்தா வாதக்கு எழுதிக் கொடுத்த உயில் ஆவணம் எண்.79/3/2012, 23.02.1996ம் தேதி வாதியின் தாத்தா 1ம் பிரதிவாதிக்கு எழுதிக் கொடுத்ததாக சொல்லப்படும் சீர்திருத்த பத்திர ஆவணம் எண்.512/1996 ஆகிய ஆவணங்களில் உள்ள கையெழுத்து மற்றும் கைரேகை பதிவேடுகளை சாத்தூர் சார்பதிவாளர் மூலம் நீதிமன்றத்துக்கு கொண்டுவரப்பெற்று, தடயவியல் ஆய்வகத்திற்கு நீதிமன்ற ஆணையர் மூலம் அனுப்பி வைத்து, கைரேகை மற்றும் கையெழுத்தை ஒப்பிட்டுப் பார்க்க வேண்டி மனு தாக்கல் செய்யப்பட்டு ஷை மனுவானது கடந்த 21.07.2023ம் தேதி அனுமதிக்கப்பட்டுள்ளது. அதன்மூலம் நீதிமன்ற ஆணையர் நியமனம் செய்யப்பட்டு மதுரையில் உள்ள தடயவியல் ஆய்வகத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது. இந்நிலையில் வழக்கு நீதிமன்றத்தில் நிலுவையில் இருந்து வரும் சூழ்நிலையில் 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி இத்துடன் தாக்கல் செய்துள்ள மனுவில் குறிப்பிடப்பட்ட நபருக்கு தபசில் சொத்தில் ஒரு பகுதியை விற்பனை செய்துள்ள விவரம் தபசில்

சொத்து சம்மந்தமாக வில்லங்கம் எடுத்து பார்த்தபோது தான் மனதாரர்/வாதிக்கு தெரிய வந்தது. மேற்படி 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதியின் செயல் சட்டத்திற்கு விரோதமானதாகும். மேற்படி வழக்கில் மனுதாரரது தரப்பிற்கு நல்ல வாதம் உள்ளது. எனவே இத்துடன் தாக்கல் செய்துள்ள மனுவில் குறிப்பிடப்பட்ட நபரை தாவா வழக்கில் கட்சிக்காரராக சேர்க்க அனுமதி வழங்கி உத்தரவிடக்கோரி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

3) <u>**2ம் எதிர்மனுதாரர்/பிரதிவாதியால் தாக்கல் செய்யப்பட்டு 3ம் எதிர்மனுதாரர்/ பிரதிவாதியால் ஏற்றுக்கொள்ளப்பட்ட எதிருரை சுருக்கம்:–**</u>

மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவானது சட்டப்படிக்கும், நியாயப்படிக்கும் செல்லத்தக்கதல்ல. அசல் வழக்கானது விளம்புகை பரிகாரம் கோரி தாக்கல் செய்யப்பட்டு மேற்படி அசல் வழக்கில் கையெழுத்து மற்றும் கைரேகை பதிவேடுகளைக் கொண்டு நிதிமன்ற ஆணையர் மூலமாக தடயவியல் துறைக்கு அனுப்பி வைக்கப்பட்டு மேற்படி அறிக்கையும் நீதிமன்றத்திற்கு வரப்பெற்றுள்ளது. இந்நிலையில் அசல் வழக்கானது நிலுவையில் உள்ளதாலும், அசல் வழக்கு சொத்தின் ஒரு பகுதியை 21.07.2023ம் தேதியில் விற்றுவிட்டதாலும், அதனால் தாவா மனுவானது தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் கூறுவது ஏற்றுக்கொள்ளக் கூடியதாக இல்லை. வழக்கு நிலுவையில் உள்ளதால் வழக்கு சொத்தை கிரையம் பெறுபவர் dispends என்கிற கோட்பாட்டிற்குள் வருவதால் மேற்படி நபர் அசல் வழக்கிற்கு தேவையற்ற நபராவார். அதனால் அசல் வழக்கில் சேர்க்க வேண்டுமென்கிற அவசியமில்லை. இந்த மனுதாரர் அசல் வழக்கை காலம் கடத்த வேண்டும் என்கிற எண்ணத்தில் இருந்து இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார். எனவே மனுதாரர் மனுவானது இந்த எதிர்மனுதாரரின் செலவு தொகையுடன் தள்ளுபடி செய்ய வேண்டியதாகும் என எதிருரை தாக்கல் செய்து வாதிடப்பட்டது.

4) இந்த மனுவில் தீர்மானிக்கப்படவேண்டிய பிரச்சனை யாதெனில் இம்மனு அனுமதிக்கக்கூடியதா? இல்லையா? என்பதைக் காண்பதேயாகும்.

5) இருதரப்பிலும் எவ்வித வாய்மொழி சாட்சியமும், ஆவண சாட்சியமும் தாக்கல் செய்யப்படவில்லை.

6) இருதரப்பு வாதங்களும் கேட்கப்பட்டது. அபிடவிட்டு, எதிருரை மற்றும் வழக்கு

கோப்பு பரிசீலிக்கப்பட்டது.

7) **<u>தீர்வு</u>**:–

மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனுவும் அது குறித்து வாதிடப்பட்டதும் இந்த மனுவில் ஏற்புடையதாக உள்ளது. எதிர்மனுதாரர்கள் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் எதிருரையும் அதுகுறித்து வாதிடப்பட்டதும் இந்த மனுவில் இந்த சூழ்நிலையில் இந்த வழக்கில் ஏற்புடையதாக இல்லை. எதிர்மனுதாரர்/உத்தேச பிரதிவாதியை இந்த வழக்கில் தரப்பினராக சேர்க்கக்கோரி இம்மனுவினை தாக்கல் செய்துள்ளார். 1ம் எதிர்மனுதாரர்/1ம் பிரதிவாதி தபசில் சொத்தின் ஒரு பகுதியை விற்பனை செய்துள்ளதால் அவரையும் இந்த வழக்கில் கட்சி சேர்க்க வேண்டியது அவசியமாகும். மேற்படி விபரம் சம்பந்தமாக நீதிமன்றத்திற்கு எடுத்துரைப்பதற்கு உத்தேச பிரதிவாதியை தரப்பினராக சேர்க்க வேண்டியது அவசியமாகும். மனுதாரரால் சொல்லப்பட்டுள்ள உத்தேச பிரதிவாதி இந்த வழக்கிற்கு அவசிய தரப்பினரா? இல்லையா? என்பதை இந்த மனுவில் இந்த சூழ்நிலையில் தீர்மானிக்க முடியாது. வழக்கு விசாரணையின்போது மட்டுமே தீர்மானிக்க முடியும். மனுதாரருக்கு உத்தேச பிரதிவாதியை இவ்வழக்கில் தரப்பினராக சேர்ப்பதற்கு வாய்ப்பு அளிக்காதபட்சத்தில் இவ்வழக்கில் அவசிய கட்சியினரை கட்சி சேர்க்காத தோஷத்திற்கு ஆட்படக்கூடும். மனுதாரரால் அசல் வழக்கில் எதிர்மனுதாரர்/உத்தேச பிரதிவாதியை தரப்பினராக சேர்த்து வழக்கு நடத்த உத்தரவிடக்கோரி 11.03.2024ம் தேதி தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை தள்ளுபடி செய்யும்பட்சத்தில் மனுதாரருக்கு தனது தரப்பை நிரூபணம் செய்ய முடியாமல் போய் ஈடு செய்ய முடியாத இழப்பும், நஷ்டமும் ஏற்படக்கூடும். மேலும், இம்மனுவினை தள்ளுபடி செய்யும்பட்சத்தில் இவ்வழக்கு சம்பந்தமான வேறு வழக்குகளும் எழக்கூடும். மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இம்மனுவினை அனுமதிக்கும்பட்சத்தில் எதிர்மனுதாரர்களுக்கு எவ்வாறு இழப்பு ஏற்படும் என்பது குறித்து எதிருரையில் எதிர்மனுதாரர் குறிப்பிட்டு கூறவில்லை. எனவே, மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதிக்க வேண்டியது நீதியின்பால் அவசியமாயும், நியாயமாயும் உள்ளது என இந்த நீதிமன்றம் முடிவு செய்து மனுதாரரால் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இந்த மனுவினை அனுமதித்து உத்தரவிடுகிறது.

இறுதியாக, இவ்வழக்கில் தாக்கல் செய்யப்பட்டிருக்கும் மனு, எதிருரை, வாதுரைகள் மற்றும் நீதியின்பால் கொண்ட அக்கறை ஆகியவற்றை கருத்திற்கொண்டு, உத்தேச எதிர்மனுதாரர்/உத்தேச பிரதிவாதியை தாவா வழக்கில் சேர்க்க அனுமதி வழங்கி உத்தரவிடக்கோரி 11.03.2024 ம் தேதி தாக்கல் செய்யப்பட்டிருக்கும் இம்மனுவினை அனுமதித்து இந்த நீதிமன்றம் உத்தரவிடுகிறது. மனுவின் தன்மை கருதி செலவு தொகை யாதுமில்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழைநீக்கம் செய்யப்பட்டு 2024 ம் ஆண்டு ஆகஸ்ட் திங்கள் 13 ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

P ANURADHA Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

மனுதாரர்/வாதி தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை

எதிர்மனுதாரர்கள்/பிரதிவாதிகள் தரப்பு சாட்சி, சான்றாவணங்கள் : இல்லை

P ANURADHA Digitally signed by P ANURADHA

மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சாத்தூர்.

மாவட்ட உரிமையியல் நீதிமன்றம்,
சாத்தூர்.
இ.ம.எண்.08/2024
உள்
அ.வ.எண்.26/2020
**<u>உத்தரவு</u>**
நாள்– 13.08.2024.